

# தமிழ்

## நிலை – 1

முதல் பருவம்

பகுதி – I

தமிழ் இணையக் கல்விக்கழகம்

சென்னை–600025

www.tamilvu.org

# தமிழ்

## நிலை – 1

### முதல் பருவம்

### பகுதி – I

தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை–600025.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்

## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

**மு.க. ஸ்டாலின்**
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

## வாழ்த்துரை

சீர்மிகு சிங்காரச் சென்னையிலே செந்தமிழ் காக்கும் நிறுவனமாக விளங்குகிறது, தமிழ் இணையக் கல்விக்கழகம். இக்கழகத்தின் வாயிலாகத் தமிழ்ப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக உலகமெங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்கள், தமிழை விருப்பத்துடன் கற்றுக் கொள்ளும் அயல்நாட்டினர், தமிழ்மீது ஆர்வம் கொண்ட தமிழ்ப் பற்றாளர்கள் ஆகியோருக்குப் பயன்படும் வகையில், தமிழ்ப் பாடநூல்கள் உருவாக்கப்படுகின்றன.

தமிழை ஒரு பாடமாகக் கற்காமல், ஒரு மொழியாகக் கற்போமானால், அதன் அடிப்படைத் திறன்களில் வல்லமையுடன் விளங்கமுடியும். ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்பது, மதிப்பெண் பெறுவதற்காக அன்று. அம்மொழியில் இயல்பாகப் பேசவும் படிக்கவும் எழுதவும் செய்யவேண்டும். அம்மொழியின் அழியாப் புகழ்பெற்ற இலக்கியங்களைப் படித்து, அவற்றின் சுவையுணர்தல் வேண்டும். தாம் படித்து மகிழ்ந்ததுடன், மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி, அதன் சிறப்பை உணர்த்தவேண்டும். அவ்வகையில், ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’ என்னும் பாரதியின் கூற்று ‘உலகளாவிய தமிழ்’ என மெய்ப்படும்.

செம்மொழியாம் தமிழ்மொழியை எட்டுத் திக்கும் பரப்பும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் சீரிய பணி குறிப்பிடத்தக்கது. எளிமையாக, இனிமையாகக் கற்றுக் கொள்ளும் வகையில் கலைத்திட்டம், பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில் எழுதப்பட்ட இந்நூல், தமிழை விருப்பத்துடன் கற்பதற்குத் தூண்டுகிறது. தமிழ்ப்பண்பாட்டுக்கூறுகள் சிறு சிறு செயல்பாடுகள் வாயிலாகப் பாடநூலில் இடம்பெற்றிருப்பது தமிழின் சிறப்பை வலுப்படுத்த உதவுகிறது. தமிழர் பெருமையையும் தமிழின் சிறப்பையும் உலகம் முழுவதும் பரப்புவதை நோக்கமாகக் கொண்டிலங்கும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இப்பெருமைமிகு பணி மேலும் தொடர வாழ்த்துகிறேன்.

(மு.க. ஸ்டாலின்)
முதலமைச்சர்

**த. மனோ தங்கராஜ்**
அமைச்சர் தகவல் தொழில்
நுட்பவியல் துறை

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்,
சென்னை–600 009

நாள் – 29.6.2022

## அணிந்துரை

இனிமைத் தமிழ்மொழி எமது என்னும் பெருமைக்கு உரியவர்கள் நாம். தமிழின் இனிமையை உணர்ந்தே தமிழ் இலக்கண, இலக்கியங்கள் இன்று உலகம் முழுவதும் அனைவராலும் படிக்கப்படுகின்றன. பாராட்டப்படுகின்றன. அத்தகைய வளமிக்க நம் மொழியைக் கற்றுக் கொள்வது எளிது. கற்றுத் தருவதும் எளிது. அதன் சிறப்புணர்ந்தே தமிழ் இணையக் கல்விக் கழகம் இப்பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. உலகம் எங்கும் வாழும் புலம்பெயர் தமிழர்களுக்காகவும் தமிழை விரும்பிக் கற்க விழைபவர்களுக்காகவும் எளிமையாகக் கொண்டுசெல்லும் முயற்சியை மேற்கொள்கிறது.

இன்று இணையத்தில் மிகுதியாகப் பயன்பாட்டிலுள்ள மொழியாகத் தமிழ் விளங்குகிறது. தமிழ் இணையக் கல்விக் கழகம் இவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, தமிழ்ப் பாடநூலை உருவாக்கியுள்ளது.

நிலை – 1, முதல் பருவத்திற்கான இப்பாடநூல், தமிழை மிக எளிமையாக அறிமுகம் செய்கிறது. கண்கவர் வண்ணப்படங்கள் மூலம் எழுத்துகளும் சொற்களும் தொடர்களும் அறிமுகம் செய்யப்படுகின்றன. மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எளிய செயல்பாடுகள், ஓசைநயமிக்க எளிய பாடல்கள், இயல்பான பேச்சுத் தமிழ் உரையாடல்கள் எனப் பாடநூல் முழுவதும் விரவியுள்ளன. பாடநூலுக்கு வலிமை சேர்க்கும் வகையில் விரைவுத் துலங்கல் குறியீடுகள், காணொலிப் படங்கள், படித்தல் செயல்பாடுகளுக்கான ஒலிப்பதிவு நாடாக்கள், பாடப்பொருளை நன்கு கற்றுத் தருவதற்கு உதவும் துணைக்கருவிகள் என அனைத்தும் ஒரு தொகுப்பாக உருவாக்கப்பட்டிருப்பது, தமிழ்மீதான ஆர்வத்தைத் தமிழ் கற்பவர்களிடையே ஏற்படுத்துகிறது.

பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்நூல், தமிழின் பெருமை, தமிழர் பண்பாடு, கலை முதலான அனைத்தையும் அறிந்துகொள்வதற்கு நல்வாய்ப்பை அமைத்துச் சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ளது எனில் அது மிகையன்று. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இப்பணி மேலும் தொடரவேண்டும் என்று என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(த. மனோ தங்கராஜ்)

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | உயிர் எழுத்துகள் ( அ–ஔ)<br>**பாடி மகிழ்வோம்**<br>அணில்! அணில்!<br>ஆத்திசூடி (அ–ஔ)<br>**கேட்டல் கருத்தறிதல்**<br>இனியாவின் பிறந்தநாள் விழா<br>(கதை) | 1 |
| 2 | உயிர் எழுத்துகள் (எ–ஔ)<br>ஆய்த எழுத்து (ஃ)<br>**இலக்கணம்**<br>குறில், நெடில்<br>**பாடி மகிழ்வோம்**<br>எலி ஒன்று வந்தது!<br>ஆத்திசூடி (எ–ஔ)<br>**கேட்டல் கருத்தறிதல்**<br>உணவுத் திருவிழா<br>(உரையாடல்) | 22 |
| 3 | மெய் எழுத்துகள் (க்–ப்)<br>**பாடி மகிழ்வோம்**<br>மிதிவண்டி<br>**கேட்டல் கருத்தறிதல்**<br>கண்களைக் காப்போம்<br>(உரையாடல்) | 45 |
| 4 | மெய் எழுத்துகள் (ம்–ன்)<br>**இலக்கணம்**<br>வல்லினம், மெல்லினம், இடையினம்.<br>**பாடி மகிழ்வோம்**<br>நத்தையாரே!<br>நத்தையாரே!<br>**கேட்டல் கருத்தறிதல்**<br>மகிழ்வித்து மகிழ் (கதை) | 60 |
| 5 | உயிர்மெய் எழுத்துகள் (க–னீ)<br>**பாடி மகிழ்வோம்**<br>அன்பு!<br>**கேட்டல் கருத்தறிதல்**<br>புகழ்ச்சிக்கு மயங்காதே!<br>(கதை) | 76 |

| பாடம் | பாடப்பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 6 | உயிர்மெய் எழுத்துகள் (கு–னே)<br>பாடி மகிழ்வோம்: ஒளிபடைத்த கண்ணினாய்!<br>கேட்டல் கருத்தறிதல்: தமிழ்ப்பள்ளி (உரையாடல்) | 102 |
| 7 | உயிர்மெய் எழுத்துகள் (கை–னௌ)<br>இலக்கணம்: குறில் நெடில்<br>பாடி மகிழ்வோம்: உலகநீதி<br>கேட்டல் கருத்தறிதல்: புத்தகம் படிப்போமா! (கதை) | 127 |
| 8 | உறவு முறை<br>பாடி மகிழ்வோம்: செடி வளர்ப்பேன்<br>மீள்பார்வை பயிற்சிகள் | 156 |


கேட்க...

பார்க்க...

மதிப்பீடு

# வணக்கம்

பாடம்
1



## 1.1 பேசுவோம்



### சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அம்மா | அப்பா | அத்தி | அன்னாசி |
| ஆப்பிள் | ஆரஞ்சு | இலந்தை | உலர் பழங்கள் |

## உயிர் எழுத்துகள்

தமிழ்மொழியில் உயிர் எழுத்துகள் பன்னிரண்டு.
முதலில் அ முதல் ஊ வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்.

அ ஆ

இ ஈ

உ ஊ

## 1.2 அறிவோம்

### அ



அம்மா



அணில்



அல்லி



அம்பு



அருவி



அரசன்

### ஆ



ஆடு



ஆறு



ஆமை



ஆப்பிள்



ஆரஞ்சு



ஆலமரம்

## 1.3 திரும்பப் படிப்போம்

| அ | ஆ |
|---|---|
| அம்மா | ஆடு |
| அணில் | ஆறு |
| அல்லி | ஆமை |
| அம்பு | ஆப்பிள் |
| அருவி | ஆரஞ்சு |
| அரசன் | ஆலமரம் |

### புதிய சொற்கள்

அன்னம் அப்பளம்

ஆனி ஆந்தை

## 1.4 சொல்லிப் பழகுவோம்



சிறிய அணில்



பெரிய அம்பு



சிறிய ஆமை



பெரிய ஆடு

## பயிற்சி

### பொருத்துவோம்



அ



ஆ



ஆ



அ

## 1.5 பாடி மகிழ்வோம்

### அணில்! அணில்!



அணில்! அணில்! ஓடுது!
ஆடிப் பாடி ஓடுது!
இனிய பழம் தேடுது!
ஈச்ச மரத்தைப் பார்க்குது!
உச்சி மேலே ஏறுது!
ஊஞ்சல் போல ஆடுது!

## 1.2.1 அறிவோம்

### இ



இஞ்சி



இலை



இட்லி



இறகு

### ஈ



ஈ



ஈட்டி



ஈசல்



ஈச்சமரம்

## 1.3.1 திரும்பப் படிப்போம்

**இ**

இஞ்சி

இலை

இட்லி

இறகு

**ஈ**

ஈ

ஈட்டி

ஈசல்

ஈச்சமரம்

**புதிய சொற்கள்**

இரண்டு

இனிப்பு

ஈரம்

## 1.4.1 சொல்லிப் பழகுவோம்



இஞ்சி நல்லது



ஈச்சம்பழம் இனியது



இட்லி உண்



ஈட்டி எறி

## பயிற்சி

### பொருத்துவோம்



ஈ



இ



ஈ



இ

## 1.5.1 பாடி மகிழ்வோம்

### ஆத்திசூடி

அறம் செய விரும்பு

ஆறுவது சினம்

இயல்வது கரவேல்

ஈவது விலக்கேல்

உடையது விளம்பேல்

ஊக்கமது கைவிடேல்

– ஔவையார்



## 1.2.2 அறிவோம்

**உ**



உணவு



உப்பு



உலகம்



உழவர்

**ஊ**



ஊஞ்சல்



ஊசி



ஊதல்



ஊதா

## 1.3.2 திரும்பப் படிப்போம்

**உ**

உணவு

உப்பு

உலகம்

உழவர்

**ஊ**

ஊஞ்சல்

ஊசி

ஊதல்

ஊதா

**புதிய சொற்கள்**

உண்டியல்

உரல்

ஊக்கம்

ஊர்வலம்

## 1.4.2 சொல்லிப் பழகுவோம்



உழவு செய்



ஊஞ்சல் ஆடு



உணவு உண்



ஊதல் ஊது

## பயிற்சி

### பொருத்துவோம்



○ ○ உ___



○ ○ உ___



○ ○ உள



○ ○ உள

## 1.6 கேட்டல் கருத்தறிதல்

### இனியாவின் பிறந்தநாள் விழா



இனியாவுக்குப் பிறந்தநாள். பெற்றோர் சிறப்பாகக் கொண்டாட விரும்பினர். மகளின் விருப்பத்தைக் கேட்டனர். அவள், நண்பர்களுடன் கொண்டாடலாம் என்றாள். பெற்றோர் ஏற்றுக் கொண்டனர். இனியா தன் நண்பர்களை வீட்டிற்கு அழைத்தாள். இனியாவின் பிறந்தநாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடினர். அனைவரும் விருந்து உண்டனர். பின்னர், அருகிலுள்ள கடற்கரைக்குச் சென்றனர். மாலை வீடு திரும்பினர். இனியாவுக்கு அந்த நாள் இனிய நாளாக அமைந்தது.

## பயிற்சிகள்

(அ) எழுத்தை நிரப்புவோம் (அ, ஆ, இ. ஈ, உ, ஊ)



______ ணில்



______ லை



______ ப்பு



______ தல்



______ மை



______ சல்

(ஆ) பார்த்து எழுதுவோம்







(இ) வரிசைப்படுத்தி எழுதுவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈ | உ | ஆ | ஊ | இ | அ |



(ஈ) விடுபட்ட எழுத்தை எழுதுவோம்




(உ) வழிகாட்டிய எழுத்துகளை வரிசைப்படி எழுதுவோம்




முயலுக்கு வழிகாட்டிய எழுத்துகளை எழுதுவோம்

பாடம் 2

# வணக்கம்



## 2.1 பேசுவோம்



### சொற்கள்

(ஐந்து, எட்டு, ஏழு, ஒன்பது, ஒட்டகம், ஓடம், ஓணான், ஓநாய்)

## உயிர் எழுத்துகள்

தமிழ்மொழியில் உயிர் எழுத்துகள் பன்னிரண்டு. இப்போது, எ முதல் ஔ வரையுள்ள எழுத்துகளையும் ஃ என்னும் ஆய்த எழுத்தையும் படிப்போம்.

எ ஏ

ஐ ஒ

ஓ ஔ

ஃ

## 2.2 அறிவோம்

எ



எலி



எருது



எட்டு



எறும்பு

ஏ



ஏழு



ஏர்



ஏரி



ஏணி

## 2.3 திரும்பப் படிப்போம்

| எ | ஏ |
|---|---|
| எலி | ஏழு |
| எருது | ஏர் |
| எட்டு | ஏரி |
| எறும்பு | ஏணி |

**புதிய சொற்கள்**

| | |
|---|---|
| எரிமலை | எலுமிச்சை |
| ஏலக்காய் | ஏவுகணை |

## 2.4 சொல்லிப் பழகுவோம்



எறும்புகள் ஊரும்



எலுமிச்சை புளிக்கும்



ஏவுகணை பாயும்



ஏலக்காய் மணக்கும்

## பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்



எ



ஏ



எ



ஏ

## (ஆ) எழுத்தை நிரப்புவோம்



| | | |
|---|---|---|
| | ரு | து |

(எ/ஏ)



| | |
|---|---|
| | ரி |

(எ/ஏ)



| | |
|---|---|
| | லி |

(எ/ஏ)



| | |
|---|---|
| | ணி |

(எ/ஏ)



| | | | |
|---|---|---|---|
| | று | ம் | பு |

(எ/ஏ)

## 2.5 பாடி மகிழ்வோம்

### எலி ஒன்று வந்தது!



எலி ஒன்று வந்தது!

ஏணி மேலே ஏறுது!

ஐந்து ரொட்டி கண்டது!

ஒன்றைக் கையில் எடுத்தது!

ஓடி ஒளிந்து தின்றது!

ஓங்கி ஏப்பம் விட்டது!

ஔ... ஔ...

## 2.2.1 அறிவோம்

ஐ



ஐவர்



ஐந்து



ஐவிரல்

## 2.3.1 திரும்பப் படிப்போம்

**ஐ**

ஐவர்
ஐந்து
ஐவிரல்

**புதிய சொற்கள்**

ஐயா
ஐப்பசி
ஐம்பது
ஐரோப்பா

## 2.4.1 சொல்லிப் பழகுவோம்



ஐவர் நின்றனர்



ஐந்து பலூன்

## 2.2.2 அறிவோம்

### ஒ



ஒன்று



ஒன்பது



ஒட்டகம்



ஒட்டகச்சிவிங்கி

### ஓ



ஓடை



ஓலை



ஓவியர்



ஓணான்

## 2.3.2 திரும்பப் படிப்போம்

### ஒ

ஒன்று

ஒன்பது

ஒட்டகம்

ஒட்டகச்சிவிங்கி

### ஓ

ஓடை

ஓலை

ஓவியர்

ஓணான்

### புதிய சொற்கள்

| | |
|---|---|
| ஒலிபெருக்கி | ஒற்றுமை |
| ஓட்டம் | ஓவியம் |

## 2.4.2 சொல்லிப் பழகுவோம்



பெரிய ஒட்டகம்



சிறிய ஓடம்



இரண்டு ஒலிபெருக்கி



அழகிய ஓவியம்

## பயிற்சிகள்

### (அ) பொருத்துவோம்

| | | |
|---|---|---|
|  | ○ ○ | ஓ |
|  | ○ ○ | ஒ |
|  | ○ ○ | ஓ |
|  | ○ ○ | ஒ |

## (ஆ) எழுத்தை நிரப்புவோம்



| | | |
|---|---|---|
| | ட | ம் |

(ஒ / ஓ)



| | |
|---|---|
| | லை |

(ஒ / ஓ)



| | | |
|---|---|---|
| | ன் | று |

(ஒ / ஓ)



| | | | | |
|---|---|---|---|---|
| | ட் | ட | க | ம் |

(ஒ / ஓ)



| | | |
|---|---|---|
| | ணா | ன் |

(ஒ / ஓ)

## 2.5.1 பாடி மகிழ்வோம்

### ஆத்திசூடி

எண் எழுத்து இகழேல்

ஏற்பது இகழ்ச்சி

ஐயம் இட்டு உண்

ஒப்புரவு ஒழுகு

ஓதுவது ஒழியேல்

ஔவியம் பேசேல்

அஃகஞ் சுருக்கேல்

– ஔவையார்



## 2.2.3 அறிவோம்

ஔ



ஔடதம்



ஔவையார்

## 2.3.3 திரும்பப் படிப்போம்

ஔ

ஔவையார்

ஔடதம்

## 2.4.3 சொல்லிப் பழகுவோம்



ஔவையார் வந்தார்

## பயிற்சி

**நிரப்புவோம்**



| | | | |
|---|---|---|---|
| | வை | யா | ர் |



| | | | |
|---|---|---|---|
| | ட | த | ம் |

## 2.6 கேட்டல் கருத்தறிதல்

### உணவுத் திருவிழா



| | | |
|---|---|---|
| அப்பா | : | உணவுத் திருவிழா நடக்கிறதே, போலாமா? |
| அம்மா | : | அப்படியா? எங்கே நடக்குது? |
| அப்பா | : | கடற்கரைக்குப் பக்கத்தில இருக்கிற விளையாட்டுத் திடல்ல நடக்குது. |
| வேந்தன் | : | அப்பா, நா விளையாடப்போறேன், அதனால வரலேப்பா. |
| முல்லை | : | நானுந்தான் விளையாடப்போறேன், |
| அம்மா | : | அடடா, பிள்ளைகளா நல்லாக் கேட்டுக்குங்க. அங்கே வந்தீங்கனா பலவகையான உணவுகளைப் பாக்கலாம். |
| வேந்தன் | : | அப்படி என்ன உணவு இருக்கும்? |
| அம்மா | : | ஆப்பம், இடியாப்பம், பிட்டு, கொழுக்கட்டை, அடை, தோசை, பொங்கல், வடை முறுக்கு.........இன்னும் எத்தனையோ இருக்கு. |
| முல்லை | : | ஓ! இத்தனை உணவுகளா? எல்லா உணவையும் பார்க்கணும்போல இருக்கே? |
| அம்மா | : | பார்க்க மட்டுமா? உங்களுக்குப் பிடித்த உணவுகளை வாங்கியும் சாப்பிடலாம். |
| வேந்தன் | : | ஓ! நாங்க இப்பவே வர்றோம்பா. |
| அப்பா | : | மிக்க மகிழ்ச்சி. வாங்க, எல்லாரும் போலாம். |

# உயிர் எழுத்துகள்

| குறில் | நெடில் |
|---|---|
| குறுகி ஒலிப்பது | நீண்டு ஒலிப்பது |
| அ, இ, உ, எ, ஒ | ஆ, ஈ, ஊ, ஏ, ,ஐ ஓ, ஔ |

| | |
|---|---|
| அணில் | ஆமை |
| இலை | ஈசல் |
| உலகம் | ஊஞ்சல் |
| எறும்பு | ஏணி |
| ஒட்டகம் | ஐவர் |
| | ஓணான் |
| | ஔவையார் |

## 2.2.4 அறிவோம்

ஃ



எஃகு வாள்

## 2.3.4 திரும்பப் படிப்போம்

ஃ

எஃகு வாள்

**புதிய சொற்கள்**

அஃது அஃறிணை

இஃது

## 2.4.4 சொல்லிப் பழகுவோம்







எஃகு வாள் வீசு அஃது அணில் இஃது இலை

## பயிற்சிகள்

(அ) பொருத்துவோம்



ஐவர்



ஓடம்



ஔவையார்



ஏணி



எறும்பு



ஒட்டகம்

(ஆ) நிரப்புவோம்



| | | |
|---|---|---|
| | ட | ம் |

(ஒ/ஓ)



| | | |
|---|---|---|
| | ந் | து |

(ஐ/ ஔ)



| | | | | |
|---|---|---|---|---|
| | ட் | ட | க | ம் |

(ஒ/ ஔ)



| | | |
|---|---|---|
| | ரு | து |

(எ/ஏ)



| | |
|---|---|
| | ணி |

(ஏ/எ)



| | | | |
|---|---|---|---|
| | வை | யா | ர் |

(ஔ/ஓ)

# வணக்கம்

பாடம் 3



## 3.1 பேசுவோம்




### சொற்கள்

(தேங்காய் மிட்டாய், கண்ணாடி, குச்சி மிட்டாய், கருப்பட்டி மிட்டாய், இலந்தை அடை, தேன் நெல்லிக்காய்)

## மெய் எழுத்துகள்

தமிழ்மொழியில் மெய் எழுத்துகள் பதினெட்டு. முதலில் க் முதல் ப் வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்

# க் ங் ச்

# ஞ் ட் ண்

# த் ந் ப்

## 3.2 அறிவோம்

**க்**



தக்காளி



சக்கரம்



கொக்கு

**ங்**



சங்கு



கங்காரு




வங்கி

**ச்**



பச்சை மிளகாய்



பச்சைக்கிளி



எலுமிச்சை

## 3.3 திரும்பப் படிப்போம்

| க் | ங் | ச் |
|---|---|---|
| தக்காளி | சங்கு | பச்சை மிளகாய் |
| சக்கரம் | கங்காரு | பச்சைக்கிளி |
| கொக்கு | வங்கி | எலுமிச்சை |

**புதிய சொற்கள்**

அக்கா முக்காலி தங்கம் சிங்கம் ஒட்டகச்சிவிங்கி தச்சர்

## 3.4 சொல்லிப் பழகுவோம்



கொக்கு பறக்கும்



சக்கரம் சுழலும்



மாங்காய் புளிக்கும்



சிங்கம் முழங்கும்



ஈச்சம்பழம் இனிக்கும்



பச்சைக்கிளி பேசும்

## பயிற்சி

### நிரப்புவோம்

**க்**



த ___ காளி



கொ ___ கு



ச ___ கரம்

**ங்**



ச ___ கு



க ___ காரு




வ ___ கி

**ச்**



ப ___ சை மிளகாய்



ப ___ சைக்கிளி



எலுமி ___ சை

## 3.5 பாடி மகிழ்வோம்

### மிதிவண்டி

இரு சக்கர வண்டி
இதன் பேர் மிதிவண்டி
எனக்குப் பிடித்த வண்டி
எங்கும் உருளும் வண்டி
எரிபொருள் இல்லா வண்டி
ஏறி மிதித்தால் ஓடும்
எளிதாய் எங்கும் செல்லும்
எல்லாருக்கும் ஏற்ற வண்டி



## 3.2.1 அறிவோம்

### ஞ்



பஞ்சு



இஞ்சி



ஆரஞ்சு

### ட்



எட்டு



பட்டம்



தட்டு

### ண்



வண்டு



நண்டு



பூண்டு

## 3.3.1 திரும்பப் படிப்போம்

| ஞ் | ட் | ண் |
|---|---|---|
| பஞ்சு | எட்டு | வண்டு |
| இஞ்சி | பட்டம் | நண்டு |
| ஆரஞ்சு | தட்டு | பூண்டு |

**புதிய சொற்கள்**

மஞ்சள்   கஞ்சி   பட்டு   வட்டம்   தண்டு   அண்ணன்

## 3.4.1 சொல்லிப் பழகுவோம்



கையில் பஞ்சுமிட்டாய்



மரத்தில் ஆரஞ்சு



தட்டில் லட்டு



வானில் பட்டம்



பூவில் வண்டு



கண்ணாடியில் முகம்

# பயிற்சி

## நிரப்புவோம்



(ஞ்/ச்)

| | | |
|---|---|---|
| | இ | |
| ப | | சு |
| | சி | |





(ட்/ண்)

| | | | |
|---|---|---|---|
| | ந | | |
| க | | ணா | டி |
| | டு | | |





(ப்/ட்)

| | | | |
|---|---|---|---|
| | ல | | |
| ப | | ட | ம் |
| | டு | | |



## 3.2.2 அறிவோம்

### த்



வாத்து



மத்தளம்



நத்தை

### ந்



ஐந்து



பந்து



தந்தம்

### ப்



அப்பா



பப்பாளி



கப்பல்

## 3.3.2 திரும்பப் படிப்போம்

| த் | ந் | ப் |
| --- | --- | --- |
| வாத்து | ஐந்து | அப்பா |
| மத்தளம் | பந்து | பப்பாளி |
| நத்தை | தந்தம் | கப்பல் |

**புதிய சொற்கள்**

மெத்தை சாமந்தி பந்தல் பாப்பா

## 3.4.2 சொல்லிப் பழகுவோம்



பத்து விரல்



மத்தளம் கொட்டு



பந்து விளையாடு



தண்ணீர்ப் பந்தல்



பெரிய கப்பல்



உப்பு உவர்க்கும்

## பயிற்சி

நிரப்புவோம்



ந ___ தை
(த்/ந்)



க ___ பல்
(ப்/ம்)



ப ___ து
(ந்/த்)

## 3.6 கேட்டல் கருத்தறிதல்

### கண்களைக் காப்போம்



மகிழ்நன் : எனக்குக் கண்ணு வலிக்குது டாக்டர்.

டாக்டர் : நீ எப்போதும் செல்போனில் கேம் விளையாடுகிறாயா?

மகிழ்நன் : இம். இம். ஆமா டாக்டர்.

டாக்டர் : ஓ! அப்படியெனில் உனக்குக் கண்ணில் வலி மட்டுமில்ல, கண் பார்வையும் குறையும்.

மகிழ்நன் : இதை எப்படிச் சரி செய்யறது டாக்டர்?

டாக்டர் : செல்போனில் விளையாடுவதைக் குறைத்துக்கொள்.

மகிழ்நன் : சரிங்க டாக்டர்.

டாக்டர் : பழங்கள், கேரட், கீரை சாப்பிடு. கண்ணுக்கு நல்லது.

மகிழ்நன் : எப்போது எல்லாம் சாப்பிட வேண்டும்?

டாக்டர் : நாள்தோறும் சாப்பிட வேண்டும்.

மகிழ்நன் : வேறு என்ன செய்ய வேண்டும்?

டாக்டர் : இரவில் நன்கு தூங்கு. கண்களுக்கு ஓய்வு கிடைக்கும்.

மகிழ்நன் : எத்தனை மணி நேரம் தூங்க வேண்டும்?

டாக்டர் : எட்டு மணி நேரமாவது தூங்க வேண்டும்.

மகிழ்நன் : அப்படியே செய்கிறேன், நன்றி டாக்டர்.

## பயிற்சிகள்

(அ) கண்டுபிடித்து வட்டமிடுவோம். (க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ப் | பா | ளி | இ | ஞ் | சி | மொ | ச் | சை | எ |
| ஆ | பூ | ம | ஞ் | ச | ள் | ப | ட் | டா | ணி | லு |
| ர | ண் | வெ | ங் | கா | ய | ம் | ல | ர | நு | மி |
| ஞ் | டு | தே | ங் | கா | ய் | ப | ந் | து | ங் | ச் |
| சு | த | க் | கா | ளி | மா | ங் | கா | ய் | கு | சை |
| மு | ட் | டை | ப | ந் | து | ம | த் | து | ம | ய |

(ஆ) எழுத்தை நிரப்புவோம்



கொ ____ கு



பூ ____ டு




வ ____ கி



ம ____ சள்



உ ____ பு

(இ) வட்டமிடுவோம் (க், ங், ச், ஞ், த், ந்)

| | | |
|---|---|---|
| த க் க ா ளி | ச க் க ர ம் | பூ க் க ள் |
| ம ஞ் ச ள் | இ ஞ் சி | கி ளி ஞ் ச ல் |
| ப ச் சை ச | எ லு மி ச் சை ச | ஆ ந் தை |
| ஈ ச் ச ம் ப ழ ம் | மு ந் தி ரி | ப ந் து |
| பு த் த க ம் | ந த் தை | ம த் த ள ம் |
| தே ங் க ா ய் | த ங் க ம் | ச ல ங் கை |

# வணக்கம்

பாடம் 4



## 4.1 பேசுவோம்



### சொற்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சிலம்பம் | சல்லிக்கட்டு | காற்றாடி | வாள் | செங்காந்தள் |
| பல்லாங்குழி | ஏர் | மீன் | யாழ் | இளநீர் |

## மெய் எழுத்துகள்

தமிழ்மொழியில் மெய் எழுத்துகள் பதினெட்டு. இப்போது ம் முதல் ன் வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்



## 4.2 அறிவோம்

### ம்



மரம்



வானம்



பம்பரம்

### ய்



வாய்



பாய்



நாய்

### ர்



ஏர்



வேர்



தேநீர்

## 4.3 திரும்பப் படிப்போம்

| ம் | ய் | ர் |
|---|---|---|
| மரம் | வாய் | ஏர் |
| வானம் | பாய் | வேர் |
| பம்பரம் | நாய் | தேநீர் |

**புதிய சொற்கள்**

சோளம் தம்பி ஓநாய் மலர் வெள்ளம் மிளகாய்

## 4.4 சொல்லிப் பழகுவோம்



பம்பரம் சுற்று



தம்பி சிரி



ஓநாய் பார்



பாய் சுருட்டு



தேநீர் பருகு



ஏர் ஓட்டு

## பயிற்சி

எழுத்தை நிரப்புவோம்

### ம்



அ ___ மா



த ___ பி



ப ___ பரம்

### ய்



பா ___



நா ___



மிளகா ___

### ர்



ஏ ___



வே ___



தேநீ ___

## 4.2.1 அறிவோம்

### ல்




பால்



கடல்



நெல்

### வ்



செவ்வகம்



செவ்வானம்



செவ்வாழை

### ழ்



யாழ்



நீர்வீழ்ச்சி



அழைப்பிதழ்

## 4.3.1 திரும்பப் படிப்போம்

| ல் | வ் | ழ் |
| --- | --- | --- |
| பால் | செவ்வகம் | யாழ் |
| கடல் | செவ்வானம் | நீர்வீழ்ச்சி |
| நெல் | செவ்வாழை | அழைப்பிதழ் |

**புதிய சொற்கள்**

| | | | |
| --- | --- | --- | --- |
| குயில் | வானவில் | செவ்வாய் | கேழ்வரகு |
| மயில் | சேவல் | செவ்வந்தி | தாழ்ப்பாள் |

## 4.4.1 சொல்லிப் பழகுவோம்



பால் குடி



வானவில் பார்



செவ்வாழை சுவை



செவ்வந்தி பறி



தமிழ் படி



யாழ் மீட்டு

## பயிற்சிகள்

### (அ) சொல் உருவாக்குவோம்

பா, கா, ப, க → ல்

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________

### (ஆ) எழுத்தை நிரப்புவோம்

வ்

- செ____ வகம்
- செ____ வாழை
- செ____ வாய்
- செ____ வானம்

ழ்

- நீர்வீ ____ ச்சி
- கே ____ வரகு
- அழைப்பித ____
- யா ____

## 4.5 பாடி மகிழ்வோம்

### நத்தையாரே! நத்தையாரே!

நத்தையாரே! நத்தையாரே !
அத்தை வீடு பயணமோ?
அத்தை வீடு போக முதுகில்
தண்ணீர்க் குடம் வேணுமோ?
அத்தையார்க்கு நீர் சுமக்கும்
நத்தையாரே! வாருங்கள்!
மெத்த வழியில் நீரும் சிந்தும்
மெல்ல மெல்லச் செல்லுங்கள்!

– அழ. வள்ளியப்பா



## 4.2.2 அறிவோம்

**ள்**



பள்ளி



முள்



தேள்

**ற்**



நாற்காலி



காற்றாடி



வெற்றிலை

**ன்**



தென்னை



மான்



தேன்

## 4.3.2 திரும்பப் படிப்போம்

| ள் | ற் | ன் |
|---|---|---|
| பள்ளி | நாற்காலி | தென்னை |
| முள் | காற்றாடி | மான் |
| தேள் | வெற்றிலை | தேன் |

**புதிய சொற்கள்**

பள்ளம் கற்கண்டு கன்று நாற்று தின்பண்டம்

## 4.4.2 சொல்லிப் பழகுவோம்



வாள் வீசலாம்



தேள் கொட்டும்



காற்றாடி சுழலும்



கீற்று அசையும்



தேன் இனிக்கும்



மான் ஓடும்

## பயிற்சி

### நிரப்புவோம்

**ள்**

- மு _____
- தே _____
- ப ___ ளி
- வா _____

**ற்**

- வெ ___ றிலை
- நா ___ று
- கா ___ றாடி
- நா ___ காலி

**ன்**

- க ____ று
- தே _____
- மா ____
- தெ _____ னை

## 4.6 கேட்டல் கருத்தறிதல்

### மகிழ்வித்து மகிழ்



பாரதியின் பெற்றோருக்கு அன்று திருமணநாள். பெற்றோருக்கு வாழ்த்து கூறிய பாரதி, வேண்டுகோள் ஒன்றையும் வைத்தாள். அதாவது, சாலையோரம் வசிப்பவர்களுக்கு உணவும் உடையும் தரவேண்டும் என விரும்பினாள். பெற்றோரும் ஒப்புக் கொண்டனர். அவள் விரும்பியபடி புத்தாடைகள் வழங்கினர். பாரதியும் பெற்றோருடன் சேர்ந்து, தன் கையாலேயே பலருக்கும் உணவளித்து மகிழ்ந்தாள். அன்றைய நிகழ்வு அனைவருக்கும் மனநிறைவைத் தந்தது.

# மெய்யெழுத்துகள்

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| வல்லோசை உடையது | மெல்லோசை உடையது | இரண்டிற்கும் இடைப்பட்டு ஒலிப்பது |
| க், ச், ட், த், ப், ற் | ங், ஞ், ண், ந், ம், ன் | ய், ர், ல், வ், ழ், ள் |
| தக்காளி<br>எலுமிச்சை<br>பட்டம்<br>மத்தளம்<br>கப்பல்<br>காற்றாடி | சங்கு<br>பஞ்சு<br>நண்டு<br>தந்தம்<br>வானம்<br>தேன் | நாய்<br>ஏர்<br>கடல்<br>செவ்வாழை<br>யாழ்<br>தேள் |

## பயிற்சிகள்

(அ) மெய்யெழுத்துகளைக் கண்டுபிடித்து வட்டமிடுவோம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ப | ம் | ப | ர | ம் | செ | றா |
| ம | ப | மா | ன் | ந | வ் | தே |
| மி | ள | கா | ய் | ண் | வா | ர் |
| கா | ல் | மா | டு | டு | ழை | ழ் |
| லை | தே | ன் | ர் | க | ய் | யா |

(ஆ) எழுத்தை நிரப்புவோம்



| | | | | |
|---|---|---|---|---|
| ப | | ப | ர | ம் |



| | | | |
|---|---|---|---|
| மி | ள | கா | |



| | | | |
|---|---|---|---|
| இ | ள | நீ | |



| | | |
|---|---|---|
| க | ட | |



| | | | |
|---|---|---|---|
| செ | | வா | ழை |



| | |
|---|---|
| யா | |



| | |
|---|---|
| வா | |



| | | | |
|---|---|---|---|
| கா | | றா | டி |



| | |
|---|---|
| மா | |

# வணக்கம்

பாடம்
5



## 5.1 பேசுவோம்




### சொற்கள்

கரகம் நடனம் ஊதல் ஆலமரம்

பழங்கள் அப்பளம் மத்தளம் பந்தல்

## உயிர்மெய் எழுத்துகள்

தமிழ்மொழியில் உயிர்மெய் எழுத்துகள் 216.

முதலில் க முதல் னீ வரையுள்ள எழுத்துகளைப் படிப்போம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ |
| ச் | ச | சா | சி | சீ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ |
| ட் | ட | டா | டி | டீ |
| ண் | ண | ணா | ணி | ணீ |
| த் | த | தா | தி | தீ |
| ந் | ந | நா | நி | நீ |
| ப் | ப | பா | பி | பீ |
| ம் | ம | மா | மி | மீ |
| ய் | ய | யா | யி | யீ |
| ர் | ர | ரா | ரி | ரீ |
| ல் | ல | லா | லி | லீ |
| வ் | வ | வா | வி | வீ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ |
| ள் | ள | ளா | ளி | ளீ |
| ற் | ற | றா | றி | றீ |
| ன் | ன | னா | னி | னீ |

## 5.2 அறிவோம்

### 'க' முதல் 'ன' வரை அறிமுகம்



க் + அ = க

கப்பல்

ங

ங் + அ = ங



ச் + அ = ச

சக்கரம்

ஞ

ஞ் + அ = ஞ



ட் + அ = ட

பட்டம்



ண் + அ = ண

பணம்



த் + அ = த

தந்தம்



ந் + அ = ந

நகம்



ப் + அ = ப

பம்பரம்



ம் + அ = ம

மத்தளம்



ய் + அ = ய

வயல்



ர் + அ = ர

கரகம்



ல் + அ = ல
உலகம்



வ் + அ = வ
வட்டம்



ழ் + அ = ழ
உழவர்



ள் + அ = ள
அப்பளம்



ற் + அ = ற
ஏற்றம்



ன் + அ = ன
அன்னம்

## 5.3 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கப்பல் | சக்கரம் | பட்டம் | பணம் |
| தந்தம் | நகம் | பம்பரம் | மத்தளம் |
| வயல் | கரகம் | உலகம் | வட்டம் |
| உழவர் | அப்பளம் | ஏற்றம் | அன்னம் |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| கண் | ஈரம் | கடல் |
| மணல் | பழங்கள் | பல் |

## 5.4 சொல்லிப் பழகுவோம்



ஏற்றம் இறை



பட்டம் விடு



நகம் வெட்டு



அப்பளம் தின்

## 5.5 பாடி மகிழ்வோம்

### அன்பு

பட்டை போடப் போடத்தான்
பளபளக்கும் வைரமே
மெருகு கொடுக்கக் கொடுக்கத்தான்
மினுமினுக்கும் தங்கமே

அரும்பு மலர மலரத்தான்
அளிக்கும் மணத்தை மலருமே
அன்பு பெருகப் பெருகத்தான்
அமைதி அடையும் உலகமே

– அழ. வள்ளியப்பா



## பயிற்சி

### உரிய எழுத்தை எழுதுவோம்



___ ப்பல்

| | | |
|---|---|---|
| க | ம | ச |



___ க்கரம்

| | | |
|---|---|---|
| ய | ச | ப |



பட் ___ ம்

| | | |
|---|---|---|
| ட | ஞ | ண |



ப ___ ம்

| | | |
|---|---|---|
| க | ர | ண |



___ ந்தம்

| | | |
|---|---|---|
| ந | த | ப |



___ கம்

| | | |
|---|---|---|
| த | ந | ள |



பம்ப ___ ம்

| | | |
|---|---|---|
| ச | ப | ர |



___ த்தளம்

| | | |
|---|---|---|
| ய | ம | ப |



வ ___ ல்

| | | |
|---|---|---|
| ச | ய | வ |



க ___ கம்

| | | |
|---|---|---|
| ப | ர | ட |



___ ட்டம்

| | | |
|---|---|---|
| வ | ல | ந |



உ ___ வர்

| | | |
|---|---|---|
| ல | வ | ழ |



அப்ப ___ ம்

| | | |
|---|---|---|
| ள | ல | க |



ஏற் ___ ம்

| | | |
|---|---|---|
| ற | வ | ள |



அன் ___ ம்

| | | |
|---|---|---|
| ள | ன | ச |

## 5.1.1 பேசுவோம்



### சொற்கள்

| | | |
|---|---|---|
| தாயம் | நாய் | ஓநாய் |
| மான் | காகம் | காளான் |
| பலா | ஓணான் | பாய் |

## 5.2.1 அறிவோம்

**'கா' முதல் 'னா' வரை அறிமுகம்**



க் + ஆ = கா

காகம்

# நா

ங் + ஆ = ஙா



ச் + ஆ = சா

சாரல்

# ஞா

ஞ் + ஆ = ஞா

# டா

ட் + ஆ = டா



ண் + ஆ = ணா

ஓணான்



த் + ஆ = தா

தாத்தா



ந் + ஆ = நா

நாய்



ப் + ஆ = பா

பாப்பா



ம் + ஆ = மா

மான்



ய் + ஆ = யா

யாழ்



ர் + ஆ = ரா

ராகம்



ல் + ஆ = லா
பலாப்பழம்



வ் + ஆ = வா
வானம்

# ழா

ழ் + ஆ= ழா



ள் + ஆ = ளா
காளான்



ற் + ஆ = றா
இறால்

# னா

ன் + ஆ = னா

## 5.3.1 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| காகம் | சாரல் | ஓணான் | தாத்தா |
| நாய் | பாப்பா | மான் | ராகம் |
| பலாப்பழம் | வானம் | காளான் | இறால் |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| கால் | பால் | மாம்பழம் |
| தாவரம் | வாரம் | |

## 5.4.1 சொல்லிப் பழகுவோம்



பெரிய பலா



சிறிய இறால்



அழகிய மான்



இனிய ராகம்

## பயிற்சிகள்

(அ) முதல் எழுத்தை மாற்றி எழுதுவோம்



**கல்**



**கால்**



_____ ல்




_____ ல்



_____ கம்



_____ கம்



_____ டம்



_____ டம்

## (ஆ) விடுபட்ட எழுத்தை எழுதுவோம்



_____ கம்



_____ த்தா



_____ ப்பா



ஓ _____ ன்



_____ னம்



_____ ய்



_____ ன்



கா _____ ன்



_____ ழ்



இ _____ ல்



_____ ரல்



ப _____ ப்பழம்

## 5.1.2 பேசுவோம்



### சொற்கள்

சிங்கம் நரி பன்றி மயில் கிளி அணில் எலி கரடி நாற்காலி

## 5.2.2 அறிவோம்

**'கி' முதல் 'னி' வரை அறிமுகம்**



க் + இ = கி

கிண்ணம்

# ஙி

ங் + இ = ஙி



ச் + இ = சி

சிங்கம்

# ஞி

ஞ் + இ = ஞி



ட் + இ = டி

பாட்டி



ண் + இ = ணி

மணி



த் + இ = தி

தின்பண்டம்



ந் + இ = நி

நிலா



ப் + இ = பி

பின்னல்



ம் + இ = மி

மிளகாய்



ய் + இ = யி

மயில்



ர் + இ = ரி

நரி



ல் + இ = லி
பல்லி



வ் + இ = வி
விமானம்



ழ் + இ = ழி
வழி



ள் + இ = ளி
வாளி



ற் + இ = றி
பன்றி



ன் + இ = னி
மாங்கனி

## 5.3.2 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | | |
|---|---|---|---|
| கிண்ணம் | சிங்கம் | பாட்டி | மணி |
| தின்பண்டம் | நிலா | பின்னல் | மிளகாய் |
| மயில் | நரி | பல்லி | விமானம் |
| வழி | வாளி | பன்றி | மாங்கனி |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| கிளி | கட்டில் | மின்விசிறி |
| வானவில் | காகிதம் | |

## 5.4.2 சொல்லிப் பழகுவோம்



அழகான மயில்



சுவையான தின்பண்டம்



வெண்மையான நிலா



நீளமான விமானம்

## பயிற்சிகள்

(அ) விடுபட்ட எழுத்தை எழுதுவோம்



_____ ண்ணம்



_____ ங்கம்



ம _____



_____ ளகாய்



_____ ன்பண்டம்



பல் _____



பன் _____



வா _____

மி

சி

லி

கி

ணி

ளி

றி

தி

(ஆ) படத்திற்குரிய முதல் எழுத்தை வட்டமிடுவோம்.



நி கி தி



மி சா சி



ச வி க



பி கி மி



கி நி தி



தி லி பி

## 5.1.3 பேசுவோம்




**சொற்கள்**

கீழடி    கீறல்    மீன்    தீ    இளநீர்    தண்ணீர்    வீதி

## 5.2.3 அறிவோம்

### 'கீ' முதல் 'னீ' வரை அறிமுகம்



க் + ஈ = கீ
கீரி

# ஙீ

ங் + ஈ = ஙீ



ச் + ஈ = சீ
சீத்தாப்பழம்

# ஞீ

ஞ் + ஈ = ஞீ

# டீ

ட் + ஈ = டீ



ண் + ஈ = ணீ
தண்ணீர்



த் + ஈ = தீ
தீபம்



ந் + ஈ = நீ
நீச்சல்



ப் + ஈ = பீ
பீர்க்கங்காய்



ம் + ஈ = மீ
மீன்

# யீ

ய் + ஈ = யீ



ர் + ஈ = ரீ
கிரீடம்

லீ



ழீ

ல் + ஈ = லீ

வ் + ஈ = வீ
வீரன்

ழ் + ஈ = ழீ

ளீ

றீ

னீ

ள் + ஈ = ளீ

ற் + ஈ = றீ

ன் + ஈ = னீ

## 5.3.3 திரும்பப் படிப்போம்

### உயிர்மெய் எழுத்துகள்

| | | |
|---|---|---|
| கீரி | சீத்தாப்பழம் | தண்ணீர் |
| தீபம் | நீச்சல் | பீர்க்கங்காய் |
| மீன் | கிரீடம் | வீரன் |

### புதிய சொற்கள்

| | | |
|---|---|---|
| சீரகம் | நீலம் | வீரம் |
| பன்னீர் | சதவீதம் | விண்மீன் |

## 5.4.3 சொல்லிப் பழகுவோம்



தண்ணீர் குடி



நீச்சல் பழகு



மீன் பிடி



தீபம் ஏற்று

### பயிற்சிகள்

(அ) சொல் உருவாக்குவோம்

கீ

- ழடி ________
- தம் ________
- ரி ________
- றல் ________

(ஆ) கீ வரிசை எழுத்துகளை வட்டமிடுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| தீ | ஙீ | வ | மீ | ணீ |
| சீ | அ | கி | சி | இ |
| ழ | னி | நீ | தி | ட |
| டி | யீ | யி | லி | ரீ |

(இ) பொருத்துவோம்









மீன் கிரீடம் தண்ணீர் நீச்சல்

## 5.6 கேட்டல் கருத்தறிதல்

### புகழ்ச்சிக்கு மயங்காதே!






